# ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி
## (தன்னாட்சி)
### உத்தமபாளையம் – 625533.

# தமிழ்த்துறை

## பாடம் : திறன் மேம்பாடும் படைப்பாற்றல் வெளிப்பாடும் (18UTAC65)

### தலைப்பு : படைப்பிலக்கியம்

அ சுபைதா ஹசீனா MA., NET.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.

## படைப்பிலக்கியம் என்றால் என்ன?

ஒன்றைப் படிக்கும் போது இது படைப்பிலக்கியம் (Creative Literature) என்று நம்மால் சுட்டிக்காட்ட முடியும். ஆனால் படைப்பு என்றால் என்ன என்று கேட்டால் விடையளிப்பது கடினம். பிறவற்றைப் பார்த்துப் படியெடுக்கப்படாத, பார்த்து எழுதப்படாத இலக்கிய வகைகள் எல்லாம் படைப்பு இலக்கியங்களே, இவ்வகையில் கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் ஆகியன படைப்பிலக்கியங்களே. மனிதனின் மனத்தினுள் ஓடி மாற்றம் பெறுகின்ற எல்லாமே படைப்பு எனலாம். நமது படைப்பு ஆர்வத்திற்கும் படைப்பு வெளியீட்டிற்கும் இடையே நம் மனத்தில் நேர்கிற ஒன்றான படைப்புத்திறனை அடிப்படையாகக் கொண்ட எல்லாமே படைப்பு எனலாம். பெரிய அளவினவாக எழுதப்படுகின்ற படைப்புகள் கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகம் போன்றவை.

**படைப்பிலக்கிய வேறுபாடு**

பொதுவாகப் படைப்பு என்பது அனுபவப் பரிமாறல் எனலாம். தமிழில் படைப்பு இலக்கியங்கள் செய்யுளிலும் உரைநடையிலும் அமைந்திருக்கின்றன. முன்பு செய்யுளுக்கு உரை தவிர, எல்லாமே செய்யுளில்தான் எழுதப்பட்டன. எழுதப் பயன்படுத்திய பனை ஓலை சிறியதாக இருந்ததாலும் கல்வி முறை, மனப்பாட முறையாக இருந்ததாலும் செய்யுள் வடிவம் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கவிதை, நீதி, தத்துவம், மருத்துவம், சோதிடம், நாடகம் ஆகிய எல்லாமே செய்யுளில் எழுதப்பட்டன. உரைநடை வளர்ச்சி ஏற்பட்ட பிறகு, கவிதை தவிர எல்லாமே உரைநடை வடிவில் எழுதப்படுகின்றன. கவிதை மட்டும் செய்யுள், உரைநடை ஆகிய இருவடிவங்களிலும் எழுதப்படுகிறது.

கட்டுரை என்பது, அனுபவத்திலிருந்து பெற்ற சிந்தனை வளர்ச்சியால் உணர்ந்த கருத்துக்களைப் பிறருக்கு அறிவுறுத்தவும் விளக்கவும் அமைந்தது. கட்டுரையில் இன்ன சொல்லுக்கு இன்ன பொருள் என்ற வரையறை கடைப்பிடிக்கப்படுகிறது. உவமை முதலான உத்திகளுக்குக் கட்டுரையில் இடம் இல்லை. கட்டுரை அறிவு சார்ந்தது; அறிவை ஈர்ப்பது; அறிவு தருவது. கட்டுரை எதற்குமே விளக்கம் தருகிறது.

கதை என்பது நாவல், சிறுகதை, நாடகம், ஓரங்கநாடகம் ஆகியவற்றைக் குறிக்கிறது. கட்டுரை, கருத்தை அறிவுறுத்துவது எனில் கதை என்பது அனுபவத்தை நிகழ்த்திக் காட்டுவது எனலாம். கதை மனம் சார்ந்தது; கற்பனை சார்ந்தது. கதையில் உத்திகள் அனுபவத்தைப் புரியவைக்கும் வகையில் அமைகின்றன. கதை நாம் பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் ஒழுங்குபடுத்தி ஒரு வரலாறு போலத் தருகிறது. உவமை போன்ற உத்திகளுக்கும் கதையில் சிறிது இடம் உண்டு.

கவிதை என்பது உயர்ந்த அனுபவத்தின் தெளிவு எனலாம். அனுபவத்தைச் சலித்துச் சலித்துத் தேர்ந்து, படைப்பாளர் உணர்கிற ஒன்றே கவிதை. அதில், படைப்பாளர் பிறருக்கு உணர்த்த வேண்டிய செய்தி, ஒரு முடிவு போல வெளிப்படும். கதை கட்டுரைகளில் காணப்படும் காரணகாரிய அமைதி கவிதையில் இருப்பதில்லை. அனுபவத்தின் நெகிழ்ச்சியான நிலை கதை என்றால், இறுகின நிலை கவிதை என்று சொல்லலாம். கவிதையில் உத்தி, பிரிக்கமுடியாதபடி இரண்டறக் கலந்துவிடுகிறது.

எனவே அனுபவத்தில் விளைந்த கருத்தை விளக்குவது கட்டுரை என்றும் அனுபவத்தை நிகழச் செய்வது கதை என்றும் அனுபவத்தையே உணர்த்துவது கவிதை என்றும் கொள்ளலாம்.

## படைப்புணர்வு

படைப்புணர்வைப் பொறுத்தவரை கவிதை, கதை (நாடகம், நாவல், சிறுகதை, ஓரங்க நாடகம்) ஆகியவற்றிற்கும் கட்டுரைக்கும் வேறுபாடு இருக்கிறது. தகவல்களை ஒன்றுதிரட்டிப் பல புள்ளி விவரங்களுடன் அப்படியே ஓர் எழுத்தாளர் அறிக்கையாக அளிப்பது கட்டுரையாகிறது. இதில் படைப்புணர்வு குறைவு. தகவல்களைக் கொண்டு தங்கள் அனுபவத்தின் வாயிலாக ஓர் உண்மையை உருவாக்கி அதிலிருந்து கற்பனை ஆற்றலால் கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் என்று படைப்பதால் இவற்றைப் படைப்பவர்கள் கட்டுரையாளர்களை விட மிகுதியான படைப்புணர்வைப் பெறுகிறார்கள்.

செய்தித்தாள்கள், இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற தகவல் தொடர்புச் சாதனங்களின் மூலம் எழுத்தாளர்கள்

தங்கள் படைப்புகளுக்குரிய மூலப்பொருளைப் பெறுகிறார்கள். எழுத்தாளர்களுடைய அணுகுமுறையில்தான் அது, கதை கவிதை அல்லது கட்டுரை என்ற வேறுபாட்டைப் பெறுகிறது. ஆனாலும் கதை கவிதை படைப்பவர்களுக்கும், கட்டுரை படைப்பவர்களுக்கும் சில பொதுத்தன்மைகள் உள. இருபிரிவினருக்குமே தங்கள் வெளியீட்டின் அமைப்பைப் பற்றிய அறிதல் இருக்கிறது. இரு பிரிவினருமே ஒரு சிக்கலை, அல்லது கருத்தை மையமாகக் கொண்டு எழுதுகின்றனர். இரு பிரிவினருக்குமே நடைச்சிறப்பு என்பது வேண்டியதாகிறது.

கதை கவிதை படைப்பவருக்கும், கட்டுரை படைப்பவருக்கும் படிப்பறிவில் வேறுபாடு இருக்கிறது. கட்டுரைப் படைப்பாளர் நிறையப் படித்திருக்க வேண்டும்; படிக்கவும் வேண்டும்; ஆய்வுமுறை தெரிந்திருக்க வேண்டும்; தகவல் திரட்டத் தெரிந்திருக்க வேண்டும்; சிறப்புப் பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகக் கட்டுரையாளர் உண்மையை மட்டுமே எழுதவேண்டும். கதை கவிதை படைப்பவர்களுக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லை. அவர்களுக்குக் கற்பனை ஆற்றல் போதுமானது எனலாம். அவர்கள் உண்மையைப் போன்ற ஒன்றைப் படைத்தால் போதுமானது எனலாம்.

செய்தித்தாளில் ஒரு கொலை நிகழ்ச்சி, செய்தியாக வருவதாக வைத்துக்கொள்வோம். அது ஓர் இளம்பெண்ணைக் கொலை செய்த நிகழ்ச்சி பற்றிய செய்தி என்று கொள்வோம். அச்செய்தியில், யார் கொலை செய்தது? ஏன்? எப்பொழுது? எங்கு? என்ற கேள்விகளுக்கான விடைகள் இருக்கலாம். இச்செய்தி, கதை கவிதைக்கான மூலப்பொருளாகவும் கட்டுரைக்கான மூலப்பொருளாகவும் அமைகிறது. கட்டுரையாளர், இதனை உண்மைத் தகவல்களைக் கண்டறிகிற வாய்ப்பாகவே பார்ப்பார். அவருக்கு இக்கொலைக்குப் பின்னுள்ள சமூக அரசியல் பின்புலங்களை ஆய்வதில்தான் ஆர்வம் ஏற்படும். இளைஞர் சமுதாயத்தின் சீர்கேடு என்றோ, காவலர் அலட்சியம் என்றோ, பாலியல் வன்முறை என்றோ அவர் பார்வை செல்லும்.

இச்செய்தியைப் பார்க்கும் கவிதை எழுதுகிறவர், சமூகத்தின் ஆன்மாவாக மாறி அப்பெண்ணின் சார்பில் - பெண்ணினத்தின்

சார்பில், ஆணாதிக்க முறைக்கு எதிராகக் குரல் கொடுப்பார். கதை (நாவல், நாடகம், சிறுகதை, ஓரங்க நாடகம்) எழுதுகிறவர் இச்செய்தியை, நிகழ்ச்சியாக ஆக்கத்தக்க பாத்திரங்களைப் படைப்பார்; கதைக்கான நோக்கு நிலையைத் தீர்மானிப்பார். கால இடப் பின்புலங்களை வகுப்பார்; கதையில் சொல்ல வேண்டிய குறிக்கோளை இறுதி செய்வார்; வரிசைப்படியோ முன்பின்னாகவோ நிகழ்ச்சிகளை அமைப்பார். கதை முடிவைக் காட்டுகிறபோது செய்திக்கும் கதைக்கும் தொடர்பே இல்லாது போனாலும் போகலாம். ஆனால் உண்மை போல அதைப் படைத்திருப்பார்.

இதே செய்தியைப் பத்துக் கட்டுரையாளர்கள் கட்டுரைகளாக்குகிற போது அப்பத்துக் கட்டுரைகளுக்குள்ளும் எழுதுகிற முறையில் வேறுபாடு சிறிதளவுதான் இருக்கும். ஆனால் பத்துக் கதையாசிரியர்கள் கதைகளாக்குகிற போது அப்பத்துக் கதைகளும் பத்து விதமாக இருக்கும். ஒருவர், கொலை செய்தவன் குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுப்பது போலக் கதையை அமைப்பார், இன்னொருவர், அப்பெண்ணின் காதலன்தான் கொலை செய்தான் என்று படைப்பார்; மற்றொருவர், பெண்ணின் தந்தையே கொன்றான் என்று படைப்பார்; வேறொருவர், மனோவியல் ரீதியில் பிரச்சினையின் பரிமாணங்களை அலசுவார். அது தற்கொலை என்றோ, விபத்து என்றோ கூட ஒருவர் படைப்பார். இறந்தது அப்பெண் அல்லள், வேறு யாரோ அனாதைப் பெண் என்று ஒருவர் படைப்பார். இப்படிப் பல வகைகளில் கதைகளை எழுதுவார்கள். அப்பெண் சாகவே இல்லை என்று கூடக் கதையை மாற்றியமைப்பார்கள். கதைக்கும் கட்டுரைக்கும் இப்படி நிறைய வேறுபாடு உள்ளது.

இதே நிகழ்ச்சி ஓரங்க நாடகமாக்கப்பட்டால் இன்னும் வேறுபாடு இருக்கும். எனவே கட்டுரையை விட நாவல், நாடகம்,சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம் போன்ற படைப்பிலக்கியங்களை எழுதும்போது படைப்புணர்வு மிகுதியாகக் கிடைக்கிறது.

## படைப்பிற்கான காரணம்

எப்படியோ ஓர் அனுபவத்தைப் படைப்பாளர் பெற்றுவிடுகிறார், அது அடுத்தவருக்கும் சொல்லத்தக்கதாக

இருக்கிறது. அப்படி இருப்பின் அது படைப்பாகிறது. அனுபவம் மட்டுமன்றிப் பார்த்தவை படித்தவை கற்பனையானவை எல்லாமே பிறருக்குச் சொல்லத்தக்கனவாக இருப்பின் படைப்பாகின்றன. எழுத்தாளர்கள் தங்களுடைய அனுபவத்தைத் தங்களுக்குத் தெளிவாக்கிக் கொள்ளவும், பிறருக்குச் சொல்லவும், மொழியின் மூலம் அதைப் பாதுகாக்கவும் படைக்கிறார்கள். ஒரு வீரச்செயலோ, ஒரு சிக்கலோ, ஓர் ஆளது பண்போ, காதலோ, வெறுப்போ, அவமரியாதையோ, அச்சமூட்டும் நிகழ்ச்சியோ ஏதோ ஓர் அனுபவம் படைப்பின் மூலப் பொருளாக ஆகும். அது கவிதையாக, - கதையாகப் பிறப்பெடுக்கும்.

படைப்பாளர் ஒருவரைப் படைக்கத் தூண்டுவது எதுவாகவும் இருக்கலாம். படைப்புணர்வு என்ற அக உந்துதலோ அல்லது பதிப்பகங்கள் பத்திரிகைகள் என்கிற புற உந்ததுலோ தூண்டலாம். ஒரு கருத்தின் மீது கொண்டிருக்கிற ஈடுபாடும் தூண்டலாம். தூண்டுதல், எப்படியும் ஏற்படலாம். ஸ்டீவன்சன் (Stevenson) தம் மகனை மகிழ்விக்க ஒரு தீவின் வரை படத்தை வரைந்து காட்டினார். பின்னாளில் 'புதையல் தீவு' (Treasure Island) என்கிற நாவல் உருவாவதற்கு அவ்வரைபடமே காரணமாயிற்று. ஒரு படைப்பாளரின் முந்தைய படைப்பே கூடத் தொடர்ந்து எழுதத் தூண்டலாம். பால்ஸாக் (Balzac) பிரஞ்சு மக்களின் வாழ்க்கையைப் பற்றித் தொடர்ந்து எழுத விரும்பியதால் பிரஞ்சு அரசியல் வாழ்வு, பிரஞ்சுப் படை வீரர் வாழ்வு, பாரிஸ் நகர வாழ்வு என்று ஒரு படைப்பிலிருந்து இன்னொரு படைப்பிற்கான பொறியைப் பெற்றுத் தொடர்ச்சியாக எழுதினார். கால்ஸ் வொர்த்தி (Galsworthy). ஒரு குடும்பத்தின் பரம்பரை வரலாற்றைச் சொல்வது போலப் பல காலப் பகுதிப் பிரஞ்சு வாழ்க்கையை வெளியிட்டார். ஒரு படைப்பாளரின் படைப்பு இன்னொரு படைப்பாளரைத் தூண்டலாம். கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் நந்தினி பாத்திரத்தைக் கொண்டு தொடர்ச்சியாக விக்கிரமன் 'நந்திபுரத்து நாயகி' என்ற நாவலைப் படைத்நார். இப்படிப் படைப்புகள் தோன்றப் பல காரணங்கள் இருக்கலாம்.

எழுத்தாளர்களின் சொந்த நிலைமைகள் கூடப் படைப்பைத் தூண்டியிருக்கலாம். எழுத்தாளர்களுக்கு இளமைப் பருவம்

துன்பமயமானதாக இருந்திருக்கலாம். இளம் வயதில் அவர்கள் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கலாம்; வறுமையில் வாடியிருக்கலாம்; உடல் நலக்குறைவு இருந்திருக்கலாம். பிற மக்களுக்குப் போலவே எழுத்தாளர்களுக்கும் துன்பங்களும் பலவீனங்களும் உள. அவர்களது குறைகளே படைப்பைத் தூண்டியிருக்கலாம். கீட்ஸ் (Keats) பலவீனமான உடல் நிலையுடையவர். மில்டன் (Milton) ஊனமுற்றவர். டிக்கன்ஸ் (Dickens) பொருத்தமற்ற மண வாழ்க்கையால் வருந்தியவர். வெல்ஸ் (Wells) முன் கோபி. இப்படி இவர்களுடைய சொந்த நிலைமைகளே தூண்டிப் படைக்கச் செய்திருக்கலாம். பாரதி கூடத் தம் வறுமையை மறக்க ஓயாமல் கவிதை எழுதும் வரத்தைக் காளியிடம் வேண்டினார். எழுத்தாளர்களின் நிலையை ஆய்ந்த பிராய்ட் (Freud) 'படைப்பு என்பது மறைமுகமான செயல்' என்று கூறினார். எழுத்தாளர்கள் பிறரைப் போலவே மகிழ்ச்சி, அதிகாரம், பாலின்பம் எல்லாவற்றையும் பெற விரும்புகிறார்கள். தம் படைப்புத் திறனால் தம் படைப்பின் மூலம் இக்கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்றும் பிராய்ட் கூறினார். இப்படிப் படைப்புகள் சொந்த நிலைமைகளிலிருந்தும் உருவாகின்றன.

எழுத்தாளர்கள் படைப்பில் தங்கள் கனவைக் காண்பது மட்டுமன்றிப் பிறருடைய கனவையும் காண்கிறார்கள். ஆர்வெல் (Orwell)லின் தீமை கண்டு பொங்கும் உணர்வு, பிறருக்கான கனவுகளைக் காணத்தூண்டியது. எழுத்தாளர்கள் தமக்கும் பிறருக்கும் கிடைக்க வேண்டிய உரிமைகள், யாரோ சிலருக்கு மட்டும் உரிமையாக்கப்படுவது கண்டு ஆவேசப்படுகிறார்கள்; வாழ்க்கையின் அவலங்களை வெறுத்துக் குரல் கொடுக்கிறார்கள். கவிதைப் படைப்பாளர்கள் மற்ற படைப்பாளர்களை விடவும் ஆவேசம் மிக்கவர்கள். இவர்கள் தங்கள் கவிதைப் படைப்பை, மோசமான சமூக நிலைமைக்கு எதிரான கலகமாகவே ஆக்குகிறார்கள். ஓர் அழகிய உலகு இவர்களது கனவாகிறது. படைப்பாளர்கள் சமூகத்தின் மனச்சான்றாகத் திகழ்கிறார்கள். சரியான நீதிக்காக மதுரை அழிந்தது என்று இளங்கோவும், பசித்த மானிடத்திற்கு அமுதசுரபி வேண்டும் என்று சாத்தனாரும் படைத்துக் காட்டியதற்குக் காரணம் அவர்கள் சமூகத்தின் மனச்சான்றாக இருந்ததுதான்.

## படைப்பிலக்கியத்தின் பயன்

படைப்பாளர்கள், மக்களுக்குச் சொல்லத்தக்கன என்று நினைப்பனவற்றையெல்லாம் வெறுமனே வெளியிட்டு விடுவதில்லை. அவர்கள் தங்கள் அனுபவங்களைக் கொண்டு சில கண்ணோட்டங்களை - கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்கிறார்கள்; இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் உலக நிகழ்ச்சிகளை எடை போடுகிறார்கள்; கோட்பாட்டின் வழியே நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளிக்கிறார்கள்; தத்துவவாதிகள் போல் வெறும் உண்மைகளை வறட்டுத்தனமாகக் கூறாமல் அழகியல் கலந்து வெளியிடுகிறார்கள். காலம்காலமாக இந்தப் படைப்புகள் மனித வளர்ச்சிக்குக் காரணமாகின்றன. மனித வளர்ச்சிக்குக் காரணமான இப்படைப்புகள் சரியாக உருவாக்கப்படவில்லை எனில் தளர்ச்சி ஏற்பட்டுவிடும். எந்தப் படைப்பாற்றலின் மூலம் மனிதன் தன்னை விலங்கினின்றும் உயர்த்திக் கொண்டானோ அதே படைப்பாற்றலால் விலங்கினும் தாழ்ந்தவனாக ஆக நேரிடும். எனவே மனிதன் படைப்புகளைப் படைப்பதும், படைப்புகள் மனிதனைப் படைப்பதும் என்பதில் தான் படைப்பிலக்கியத்தின் மேன்மையும் மனித மேன்மையும் இருக்கிறது.

படைப்பாளர்கள், படைப்பின் மூலம் அழகியலை மேம்படுத்துகிறார்கள்; அழகியல் மூலம் தங்களை மேம்படுத்திக் கொள்கிறார்கள்; தங்களையே படைப்பிற்கு வழங்குகிறார்கள்; தம்மைப் புரிந்து கொள்கிறார்கள். படைப்பாளரின் அக உலகம். புற உலகத்தைத் திருத்துகிறது; அழகுபடுத்துகிறது. புற உலகம், படைப்பாளரின் அக உலகத்திடமிருந்து மருந்து பெறுகிறது; அறிவு பெறுகிறது; மேலும் படைக்கப் படைப்பாளரின் அக உலகத்தைத் தூண்டுகிறது; மேலும் படைக்க வைக்கிறது; படைப்பை நிரந்தரப்படுத்துகிறது.

## படைப்பு ஆர்வம்

படைப்பாளர் ஒவ்வொரு நாளும் எழுத வேண்டும். திருமூலர் எழுதியது போல எழுதுவதாகக் கருதி எப்போதாவது எழுதுவது குறையாகிவிடும். எழுதாமலிருப்பதற்கு நாம்தான் காரணம் என்பதை உணர வேண்டும். 'எழுத ஒன்றுமே இல்லை. எல்லாமே எழுதப்பட்டு விட்டது என்றும் புலம்பக் கூடாது. பழையனவற்றையும் புதிய கோணத்தில் படைப்பதுதான் சிறந்த படைப்பு. அகலிகையின் கதையைப் புதுமைப்பித்தன் அகல்யை கதையிலும் சாப விமோசனம் கதையிலும் புதிய கோணத்தில் படைத்துக் காட்டவில்லையா?

படைப்பிற்கென்று இவைதான் விதிகள் என்று விதிக்கமுடியாது. விதிகள் புதிது புதிதாக உருவாக்கப்படலாம். நல்ல படைப்பாளர் புதிய விதிகளை உருவாக்கிவிடுகிறார். படைப்பு ஆர்வம் அதைச் சாதிக்கும்.